முருகப்பெருமான் துணை

**மகான் பிரும்மமுனிவர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.03.2024**, சனிக்கிழமை

1. வந்துவிடு வந்துவிடு சங்கெடுத்து
வடிவேலா அரங்கன் சன்மார்க்கம்
இந்தப் பேருலகை ஆள முழங்கிவிடு
இனியும் மக்களுக்கு கலக்கமின்றி காத்துவிடு
2. காத்தருள்வேன் என அரங்கனாய்
கலியினில் கந்தனும் அவதாரம்
சத்திய கீர்த்தியாய் நிகழ்த்தியிருக்க
சற்குருவே என மக்கள் ஏற்றுவர
3. ஏற்றுவர வையகம் மாறுமெனக்கூறி
இயம்பிடுவேன் துல்லிய ஆசி
ஆற்றல்பட சோபகிருது சேல்திங்கள்
அச்சமற தசதிகதி காரிவாரம்
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 10ம் நாள், 23.03.2024, சனிக்கிழமை)
4. வாரமதில் பிரும்மமுனிவர் யானும்
வழங்குவேன் உலகோர் நலம்பெற
சோரமிலா ஞானவான்கள் படை
செகமெல்லாம் நிரம்ப வேண்டி
5. வேண்டியே ஞானம் அருளுகின்ற
வேலவன் அவதார ஞானி கண்டு
தொண்டர்களாக மக்கள் சேர்ந்து
தெரிவிப்பேன் மக்கள் சேவைஆற்றிட
6. ஆற்றிட தீவினைகள் அகலும்
ஆற்றல் தரும் சுத்த சன்மார்க்க
மாற்றம் செய்ய அரங்கன் விதைத்த
மறுமை வெல்லும் ஞானவழிகளை
7. வழிகளை மக்கள் ஏற்று
வழிமொழிந்து மற்றவரும் அறிய
வழிவகையாகக் கொண்டு செல்ல
வருங்காலம் அரங்கன் தவமான

8. தவமான வேதநெறி பலத்தால்
தரணியில் ஞானவான்கள் படை
அவனி காக்கும் வண்ணம் பெருகும்
ஆற்றலான அன்னதான சக்தி

9. சக்தி வழிதனையும் கடைபிடிக்க
சகலருக்கும் காட்டும் தயவாலே
சக்திகூடி உலகோர் தருமவான்களாக
சாற்றிடுவேன் ஆளுமை அதிகாரம்

10. அதிகாரம் அனைத்தையும் மாற்றும்
ஆற்றல் மிக்க வேலவன் ஆசி
அதிகாரம் பெற்றவர்களாகத் தேறி
அகிலத்தில் மாற்றம் நிகழ்த்துவர்

11. நிகழ்த்தவே அரங்கன் அவதாரம்
நிலவுலகம் கண்டு இயங்கிவர
வகைபட உலகோர் அரங்கனை
வணங்கிவர மாற்றம் நிகழும்

துல்லிய ஆசி முற்றே

–சுபம்–